**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070120224877

Volume: 7

Issue: 1

Month: July

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 19.04.2022

Accepted: 03.06.2022

Published: 01.07.2022

Citation:
Hazib, AMM. "Challenges Faced by Ulama in Using Sinhala as a Second Language." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 1, 2022, pp. 34–38.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i14877.

*Corresponding Author:
ammhazib@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Challenges Faced by Ulama in using Sinhala as a Second Language

**AMM. Hazib**
*Faculty of Islamic Studies and Arabic Language*
*South Eastern University of Sri Lanka*
*http://orcid.org/0000-0003-4411-0685*

**MJF. Safna**
*Faculty of Islamic Studies and Arabic Language*
*South Eastern University of Sri Lanka*

**Abstract**

The natives of Sri Lankans speak Sinhala, Muslims in the east who live in Muslim-majority areas and whose mother tongue is Tamil have a variety of problems in learning Sinhala. As a response, the purpose of this study is to assess Ulamas' capability in Sinhala languagein the Sammanthurai region of eastern province, as well as the problems they experience in learning Sinhala. This research is based on quantitative data. The data was acquired using questionnaires from 50 people who have graduated as Ulama in the recent 5 years in Sammanthurai as a primary data. Research publications, journals, and the Internet were used to gather secondary data. MS Excel was applied to inspect the information gathered. The study's findings show that, though everyone agrees it is essential to recognize Sinhala, they face a range of difficulties in using it.

**Key Words:** Ulamas, Challenges, Sinhala Language, Sammanthurai.

**References**

1. 5 Fascinating Facts AboutThe Sinhala Language. (2019, 08 23). Retrieved 05 25, 2021, from altalang.com: http://www.altalang.com/eyond-words/5-fascinating-facts-about-the-sinhala-language
2. Global Nation. (2010, 02 18). Retrieved 05 25, 2021, from facebook.com/notes/global_nation: http://m.facebook.com/notes/global-natio%CE%B1s%E0%AE%87%E0%AE%B2%E0%AE%99%E0%AF%8D%
3. Sinhala language. (2021, 03). Retrieved 06 01, 2021, from wikipedia.org: http://en.m.wikipedia.org/wiki/sinhala_language

# சிங்களத்தை இரண்டாம் மொழியாகப் பயன்படுத்துவதில் உலமாக்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

*ஏ.எம்.எம். ஹஜுப்*
இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடம்
தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

*எம். ஜே. எஃப். சஃப்னா*
இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடம்
தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வு அறிமுகம்**

*இலங்கையில் காணப்பட்ட இனப்பிரச்சினைக்கு மொழிப்பிரச்சினையே அடிப்படைக் காரணமாகியது. மொழி என்பது ஓர் இனத்தில் தோன்றிய தொடர்பாடல் கூறாகும் (சாதியா.2016). அந்த வகையில் உலகளாவியரீதியில் சுமார் 7102 மொழிகள் காணப்படுகின்றன (சஞ்சயன்.2018). பொதுவாக இலங்கை நாட்டை பொருத்தமட்டில் பல் வேறுபட்ட இனங்கள் இணைந்து வாழும் தீவாக உள்ளது. இங்கு பெரும்பான்மை மக்களால் பேசப்படும் ஒரு மொழியாகச் சிங்கள மொழியே காணப்படுவதோடு அரச கரும மொழியாகவும் காணப்படுகிறது. முஸ்லிம்களின் விவகாரம் தொடர்பில் தெளிவினை வழங்குவதில் கூடிய பங்களிப்புச் செலுத்தவேண்டிய முஸ்லிம் சமய அறிஞர்கள் அம்மொழி தொடர்பான பரீட்சயத்தை பெற்றுள்ளனரா என்பது ஆய்விற்குட்படுத்தப்பட வேண்டிய விடயமாகும். கிழக்கிலங்கையில் வாழும் முஸ்லிம்கள் தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டிருப்பதனாலும் முஸ்லிம் பெரும்பான்மைச் சூழலில் வாழ்வதாலும் சிங்கள மொழி ஆற்றலை விருத்தி செய்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். எனவே இந்த ஆய்வு உலமாக்களின் சிங்கள மொழிப் புலமை தொடர்பான மதிப்பீட்டினை மேற்கொள்ள முனைகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *உலமாக்கள், சவால்கள், சிங்கள மொழி, சம்மாந்துறை*

## ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வில் உலமாக்களின் சிங்கள மொழிப் புலமையை மதிப்பீடு செய்து அவற்றில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைப் பகுப்பாய்வு செய்தல்.

## இலக்கிய மீளாய்வு

மாசின். அப்துல் ரஹ்மான். (2018) உலமாக்களின் மும்மொழி பற்றிய மதிப்பீடு செய்யப்பட்டு அதில் மொழித்திறன் விருத்திக்கு தூண்டுதலாக அமைந்த காரணிகளாக தொழில் சூழல், குடும்ப சூழல். அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்யும் நிலை, மார்க்கத்தை தெளி வுபடுத்தல், கல்லூரியின் வழிகாட்டல், சுயவிருப்பம் என்பன இனங்காணப்பட்டுள்ளன.

சாதியா. மபாஸ்.(2016) சிங்கள மாணவர்கள் இரண்டாம் மொழியாகத் தமிழ் மொழியை கற்பதில் எதிர்கொள்ளும் சவால்களாக ஒலியனியல் தொடர்பான பிரச்சனைகள், உருபனியல் தொடர்பான பிரச்சினைகள் எனும் மொழியியல்ரீதியான பிரச்சினைகள் இவ்வாய்வினூடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

ஆக்கில். (2019) பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டாம் மொழியாகச் சிங்கள மொழியை கற்பதில் எதிர்கொண்ட சவால்களாகச் சிங்களம் தொடர்பான முன்னறிவின்மை, பேசுவதில் உரையாடுவதில் சிரமம், எழுத்துக்களில் குழப்பம், தயக்கம், ஆர்வமின்மை, இலகுவில் எழுதுவது கடினம், அறிமுகமற்ற மொழிப் பிரயோகம், விரிவுரையாளர்களுடன் உரையாடுவது கடினம் போன்றவை ஆய்வு முடிவாகப் பெறப்பட்டுள்ளன.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது அளவுரீதியான தரவுகளை அடிப்படையாகக்கொண்டது. ஆய்வின் முதல் நிலைத் தரவாகச் சம்மாந்துறை பிரதேசத்தில் 2016 தொடக்கம் 2020 வரையான 5 ஆண்டுகளில் உலமாக்களாக பட்டம் பெற்று வெளியேறிய 50 பேர் குறிக்கோள் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்தின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெறப்பட்ட தரவுகளை MS-EXCEL மென்பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையம் என்பவற்றின் மூலம் பெறப்பட்டு மீள் ஆய்வு முறையில் பாகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு உட்படுத்தப்பட்டு முடிவுகள் வரைகலை விளக்கங்களின் துணையுடன் விவரிக்கப்பட்டுள்ளன.

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

இவ்ஆய்விற்கான வினாக்கொத்துகள் வினியோகிக்கப்பட்டு அதன்மூலம் திரட்டப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன.

### 1. சிங்கள மொழியினைக் கற்பதன் அவசியம்

கிடைக்கப்பெற்ற வினாக்கொத்துகளில் 100% சதவீதமானோரின் கருத்து சிங்கள மொழியைக் கற்பது அவசியம் என்பதேயாகும்.





**வரைபு 01**

பிரகாரம் மாதிரிகள் அனைவரும் சிங்கள மொழிரீதியான பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்து இருக்கக்கூடும் என்பது புலனாகின்றது.

### 2. சிங்கள மொழியினைக் கற்றுக் கொள்வதற்கான ஆர்வம்.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட உலமாக்களின் 98% சதவீதமான பெரும்பான்மையோர் சிங்கள மொழியினைக் கற்றுக்கொள்வதற்கான ஆர்வத்துடன் இருக்கின்றனர் அதிலும் 2% வீதமான மிகக்குறைந்த அளவினரே இதற்கான ஆர்வமற்றுக் காணப்படுகின்றனர் என வரைபு 02 விபரிக்கின்றது.





**வரைபு 02**

பூர்த்தியானமுறையில் சிங்கள மொழியின் தேவையை உணர்ந்ததன் காரணமாகவே இவ்வாறான கணிசமானோர் இதில் ஆர்வமாக இருக்கின்றனர் என்பது தெளிவு படுத்தப்படுகின்றது.

### 3. சிங்கள மொழியினைக் கற்றல்

பதிலளித்த உலமாக்களின் பெரும்பான்மையோர் 57% சிங்கள மொழியினைக் கற்று இருக்கவில்லை


அதேசமயம் குறிப்பிடத்தக்க 43% வீதமானோர் சிங்கள மொழி சம்மந்தமான முன்னறிவு பெற்றிருக்கின்றனர் என்பதை வரைபு 03 தெளி வுபடுத்துகின்றது.




அதிகளவான உலமாக்கள் சிங்கள மொழியைக் கற்கவில்லை என்பதே அவர்கள் அதில் ஆர்வம் காட்டுவதற்குத் தூண்டுதலாக அமைந்த காரணியாக இருக்கக்கூடும் என யூகிக்க முடிகின்றது

**4. மதரசா பாடத்திட்டத்தில் சிங்கள மொழிப் பாடம்.**


பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 25% வீதமானோர் கற்ற மதரஸாக்களில் சிங்கள மொழி ஒரு பாடமாகக் காணப்படுகின்றது. 75% வீதமானோர் கற்ற மதரஸாக்களில் சிங்கள மொழி ஒரு பாடமாக இல்லை என்பதை வரைபு 04 காட்டுகிறது.




பெரும்பான்மையான மதரஸாக்களில் இதனை தம் பாடத்திட்டத்தில் உள்வாங்காமை மேலே அதிகமான உலமாக்கள் சிங்களமொழி அறிவினை கற்றுக்கொள்ளவில்லை என்பதில் தாக்கம் செலுத்துகின்றது.

**5. கட்டாய பாடமா? அல்லது தெரிவுப் பாடமா?**

சிங்கள மொழியை ஒரு பாடமாக கொண்ட மதரஸாக்களில் 42% வீதமான மதரசாக்களில் தெரிவுப் பாடமாகவும் 58% வீதமான மதரசாக்களில் கட்டாயப் பாடமாகவும் காணப்படுகிறது என்பதை வரைபு 05 எடுத்துரைக்கிறது




சிறிய அளவிலான மதரஸாக்களின் பாடத்திட்டத்தில் இம்மொழி உள்வாங்கப்பட்டிருந்தும் அதில் பெரும்பான்மை மதரசாக்கள் கட்டாயப் பாடமாக ஆக்கியிருப்பது ஓர் நேர்மறையான முடிவாகப் பார்க்க முடிகிறது.

**6. சிங்கள மொழிப்புலமை.**

சிங்கள மொழிப் புலமை சம்பந்தமாக மாதிரிகளின் சுய மதிப்பீட்டின் பிரகாரம் அவர்கள் வழங்கிய தரவுகளை அட்டவணை 01 சித்திரிக்கின்றது.

**அட்டவனை-1 சிங்கள மொழிப்புலமை**

| தேர்ச்சி நிலை | வாசிப்பு | எழுதுதல் | பேசுதல் | விளங்குதல் |
|---|---|---|---|---|
| தேர்ச்சி | 14.8 | 30 | 45.4 | 48.7 |
| சாதாரணம் | 53.2 | 26.5 | 33 | 21.3 |
| குறை | 32 | 43.5 | 21.6 | 30 |

உலமாக்கள் பேசுதல், விளங்குதல் என்பனவற்றில் தேர்ச்சி நிலை காணப்பட்டாலும் எழுதுதல், வாசித்தல் என்பவற்றில் பின்தங்கி காணப்படுகின்றனர். இது அவர்கள் சிங்கள மொழியினை முறையாகக் கற்கவில்லை என்பதற்குச் சான்று பகிர்கின்றது

**7. சிங்கள மொழித்திறனை விருத்தி செய்வதில் உண்டான சவால்கள்.**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட உலமாக்களில் சிங்கள மொழித் திறனை விருத்தி செய்வதில் பெரும்பான்மையானோர் பின்வரும் சவால்களைக் குறிப்பிட்டு இருந்தனர்

1. பேசுவதற்கும் கேட்பதற்கும் ஆன சூழலின்மை 91%
2. கற்பதற்கான நேரமின்மை 58%
3. பேசுவதை விளங்கிக்கொள்வது கடினம் 74%
4. வாசிப்புக் கடினம் 51%
5. தயக்கம் 29%

மேலே காணப்படும் தரவுகளின் அடிப்படையில் பெரும்பான்மையானோர் சிங்கள மொழிவளம் குன்றிக் காணப்பட காரணம் தாம் வாழும் சூழலாக இருப்பது புலனாகிறது.

**முடிவுரை**

இவ்வாய்வினைப் பொருத்தவரையில் சம்மாந்துறையில் வசிக்கும் உலமாக்களை மையப்படுத்தி அவர்களது சிங்கள மொழிப்புலமை சம்மந்தமாக மேற்கொள்ளப்பட்ட முதல் ஆய்வாகக் கருதலாம் அனைவரும் இதனை கற்பது அவசியம் என கருதினாலும் அதில் பல்வேறுபட்ட சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர். பேசுவதற்கும் கேட்பதற்கும் ஆன சூழலின்மை, கற்பதற்கான நேரமின்மை, பேசுவதை விளங்கிக்கொள்வது கடினம், வாசிப்புக் கடினம், தயக்கம் போன்ற காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

**பரிந்துரை**

1. மாதிரிகளை அதிகமாக்கி விரிவாக ஆய்வினை மேற்கொள்ளும்போது இன்னும் ஆழமாக ஆய்வு முடிவினைப் பெற்று மதிப்பீடு செய்ய முடியும்.
2. பின்புலம் தொடர்பான தகவல்கள் இவ்வாய்வில் மேற்கொள்ளப்படவில்லை அதனை பெறுவதினூடாக ஆய்வு முடிவினை இன்னும் உறுதி செய்ய முடியும்.
3. முஸ்லிம்கள் பெரும்பான்மையாகக் கொண்டதும் தமிழ் மொழியினைத் தாய்மொழியாகக் கொண்டதுமான சூழலில் வாழும் உலமாக்களுக்கும் அந்நிய மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதும் சிங்கள மொழி அதிகம் பேசப்பட கூடியதுமான சூழலில் வாழும் உலமாக்களுக்கும் இடையில் ஒப்பீட்டாய்வினை மேற்கொண்டு ஒற்றுமை வேற்றுமைகளை அடையாளப்படுத்த முடியும்.
4. இரண்டாம் மொழியாகச் சிங்கள மொழியைக் கற்பதில் எதிர்கொள்ளும் சவால்கள்
5. உலமாக்களின் மும்மொழி பற்றிய மதிப்பீடு
6. சிங்கள மாணவர்கள் இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பதில் உள்ள சிக்கல்களும் அவற்றுக்கான தீர்வுகளும்.